TNRM020084542022



**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம் இராமநாதபுரம்**

**முன்னிலை: திரு.S.B. சுஜித், B.A. B.L.(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**
**நீதித்துறை நடுவர் எண்.2 (முகூபொ),**
**இராமநாதபுரம்.**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 294/2025**

**(CNR.NO: TNRM05-008454-2022)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>சார்பு ஆய்வாளர்,<br>கேணிக்கரை காவல் நிலையம்,<br>குற்ற எண். 165/2019 |

**1 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | ஹசன்கான் |
| 3. | க/பெ | : | புகாரி |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | இந்திரா நகர்,<br>குருவிக்கார தெரு,<br>வெளிப்பட்டிணம்,<br>இராமநாதபுரம் |
| 6. | வயது | : | 42/2025 |
| **2 வது எதிரியின் விபரம்** | | | |
| 2. | பெயர் | : | நேரு தாஸ் (எ) வாசிம்கான் |
| 3. | த/பெ | : | பூச்சி |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | 61/A இந்திரா நகர்,<br>வெளிப்பட்டிணம்,<br>இராமநாதபுரம். |

| | | | |
|---|---|---|---|
| 6. | வயது | : | 37/2025 |
| 7. | சம்பவ நாள் | : | 01.06.2019–ம் தேதி 21.45 மணி |
| 8. | புகார் தேதி | : | 02.06.2019–ம் தேதி 10.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | A1 மற்றும் A2 –16.04.2020 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | A1 மற்றும் A2 –16.04.2020 ம் தேதி நிலைய பிணையில் சென்றுள்ளார்கள். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 13.06.2025 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 13.03.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 17.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 324 IPC படி |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 324 IPC படி |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை — எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை<br>அ.சா.1 – 13.03.2026 — இல்லை<br>அ.சா.2 – 13.03.2026 — இல்லை<br>அ.சா.3 – 13.03.2026 — இல்லை<br>அ.சா.4 – 13.03.2026 — 13.03.2026 |
| 17. | எதிரிகளிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 17.03.2026 |
| 18. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 19. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | குற்றமுறையிடுவோர் தரப்பில் பிரிவு 311 Cr.P.C/348 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Cr.M.P.No.281/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 13.03.2026–ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திருமதி. சுந்தரி |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திருமதி. நிர்மலாதேவி |
| 23. | எதிரிகளின் கூற்று | : | எதிரிகள் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 17.03.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 17.03.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவில், 1 மற்றும் 2வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 324 IPC படி குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து பிரிவு 271(1) BNSS/248(1) Cr.P.C ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2வது எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குபின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 13.06.2025 தேதியன்று குவிமுச பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 17.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 திருமதி. சுந்தரி அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. நிர்மலாதேவி அவர்கள் ஆஜராகியும் விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை

இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

1.**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:**

கடந்த 01.06.2019–ம் தேதி இரவு 21.45 மணியளவில் வாதி அவரது வீட்டின் முன்பு உட்கார்ந்து இருக்கும்போது அங்கு வந்த 1 மற்றும் 2 வது எதிரிகள் வாதியை பார்த்து ஏண்டா நாங்க உனக்கு வண்டி வாங்கி கொடுத்தா நீ எங்ககிட்டவே பிரச்சனை பன்ற ஏன்டா கன்டாரவோலி மகனே என்று அசிங்கமாக திட்டி இருவரும் அந்த இடத்தில் கீழே கிடந்த செங்கல் கல்லை எடுத்து வாதியின் தலையின் இடது பக்கத்திலும், நெற்றியிலும் அடித்து அதனால் வாதிக்கு சிறுகாயம் ஏற்பட காரணமாக இருந்த குற்றத்திற்காக 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 324 IPC படி கேணிக்கரை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிகளுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுச படி 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 324 இதச படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 மற்றும் அசா.3 கண்ணுற்ற சாட்சிகள், அ.சா.4 சிறப்பு சார்பு ஆய்வாளர்.

**5. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:**

அ.சா.1 சலீம் தனது சாட்சியத்தில் எதிரிகள் தங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றும் கடந்த 2019–ம் வருடம் தனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் கையெழுத்தை எங்கு வைத்து போட்டேன் என்று தெரியாது என்றும் புகார் மனுவில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

அ.சா.2 காளிமுத்து மற்றும் அ.சா.3 அசோக் ஆகியோர்கள் தனது சாட்சியத்தில் இந்த வழக்குப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

அ.சா.4 சரவணக்குமார் தனது சாட்சியத்தில் தான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் இந்த வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி. தீபா மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு. பாண்டி ஆகியோர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் அவர்களது கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பை பார்த்து அவர்களுக்காக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 02.06.2019 ம் தேதி 09.00 மணிக்கு கேணிக்கரை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி. தீபா என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு

உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆறுமுகம் மகன் சலீம் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 165/2019 பிரிவுகள் 294(b), 324 இதசவாக வழக்குப்பதிவு செய்துள்ளார் என்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 எனவும், புகார் மனு அ.சா.ஆ.3 எனவும், பின்னர் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 10.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் அழகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 எனவும், பார்வைமகஜர் அ.சா.ஆ. 5 எனவும், பின்பு சாட்சிகளான சலீம், காளிமுத்து, அசோக், சாந்தக்குமார் மற்றும் அழகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இந்நிலையில் வழக்கை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு. பாண்டி 16.04.2020 ம் தேதி 08.30 மணிக்கு கேணிக்கரை சந்திப்பு ரோடு அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் சென்றுள்ளார்கள் என்றும் பின்னர் இவ்வழக்கில் அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.மதிவாணன் என்பவரை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 எனவும், இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>Questioning U/s.351(i)(b) BNSS</u>**

**6.** அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ளவை குறித்து 313(1)(ஆ) Cr.P.C–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும்

பொய் என்று கூறினார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

**Point for determination**

**7.** இந்நிலையில், 1 மற்றும் 2வது எதிரிகள் மீது 294(b), 324 இதச படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**Appreciation of Evidence**

**8.** இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 தனது வாதத்தில், புகார்தாரரான அ.சா.1 ம், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3, ஆகியோர்கள் பிறழ் சாட்சிகளாக இருந்தாலும், அ.சா.4 கேணிக்கரை காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளரின் ஆவணங்களின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

**9.** எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரரான அ.சா.1 ம், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் பிறழ் சாட்சிகளாக இருந்தாலும், அ.சா.4 கேணிக்கரை காவல் சிறப்பு நிலைய சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளிகள் என்று முடிவு செய்ய முடியாது. எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**10.** வழக்கு சம்பவம் குறித்து அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில், அ.சா.1 ஆன புகார்தாரர், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், இந்த வழக்கைப்பற்றி தனக்கு எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களானது அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனு சங்கதிகளுக்கும், போலீசார் விசாரணை வாக்குமூலத்திற்கும் முற்றிலும் முரண்பட்டு நம்பகத்தன்மை அற்ற வகையில் அமையப்பெற்றுள்ளது. அ.சா.1 ன் சாட்சியம் மூலமாக எதிரிகள் இருவரும் அ.சா.1 யை அசிங்கமாக பேசி, கீழே கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 ன் தலையின் இடது பக்கத்திலும், நெற்றியிலும் அடித்து அதனால் அ.சா.1 க்கு சிறுகாயம் ஏற்பட்டதாகவும் எவ்வித சாட்சியமும் சொல்லப்படாத நிலையில் அவர்களது சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை.

11. இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 பிறழ் சாட்சிகளாக இருப்பதால், மற்ற சாட்சிகள் எல்லாம் விலக்கிகொள்ளப்பட்டு அ.சா.4 கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி. தீபா மற்றும் புலன்விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு. பாண்டி ஆகியோர்கள் பணி மாறுதலாகி சென்ற காரணத்தினால் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 சரவணக்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அளித்த சாட்சியமானது ஆவணங்கள் அடிப்படையில் அமைந்ததாகும். அ.சா.4 ன் மூலம் முன்னிறுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 7 ன் கீழ் சம்பவ இடத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும், மேற்படி ஆவணங்களில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்டது என்பது அ.சா.4 க்கு நேரடியாக எதுவும் தெரியாது. அதேபோல், புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றது பற்றி

அ.சா.4 க்கு நேரடியாக தெரியாது. அ.சா.4 ஆவணத்தின் அடிப்படையில் அளித்த சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்று நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

12. அரசுத்தரப்பில் முன்னிடப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையுள்ளவர்களின் சாட்சியங்களின் மூலம் எதிரிகள் அ.சா.1 யை அசிங்கமான வார்த்தைகளால் பேசி, அ.சா.1 யை கல்லை வைத்து தலையின் இடது பக்கத்திலும், நெற்றியிலும் அடித்து அதனால் அ.சா.1 க்கு சிறுகாயம் ஏற்பட காரணமாக இருந்ததாகவும் அதன் மூலம் 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது பிரிவு 294(b), 324 இதச கீழான குற்றசாட்டை புரிந்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது

13. முடிவாக, 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 324 இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS/248(1) IPC–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2 வது எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குபின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.17 07:31:49 +0530

நீதித்துறை நடுவர் எண். 2(முகூபொ),

இராமநாதபுரம்

TNRM020084542022



**<u>பின்னிணைப்பு :–</u>**

**(i) <u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | – | சலீம் | (புகார்தாரர்) |
| அ.சா.2 | – | காளிமுத்து | (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | – | அசோக் | (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | – | சரவணக்குமார் | (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**(ii) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.06.2019 | புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 02.06.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 02.06.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 02.06.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 02.06.2019 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.6 | 01.06.2019 | விபத்துப்பதிவேடு |

**(iii) <u>அரசு தரப்பு சான்று பொருள்</u>**

இல்லை

**(vi) <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :</u>**

இல்லை.

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் நீதிமன்ற பிணையில் இருந்தார்கள்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.17 07:31:55 +0530

நீதித்துறை நடுவர் எண். 2(முசுகூபொ),
இராமநாதபுரம்

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS